# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2356 - 2023 ඔක්තෝබර් මස 27 වැනි සිකුරාදා - 2023.10.27

*2356 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 2362 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 2365 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 2363 | ஏல விற்பனைகள் | 2367 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2361 - B 082508 - 5,403 (2023/10)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

***காணி அமைச்சு***

*இலங்கை நில அளவைத் திணைக்களம்*

***விலைமனுக் கோரல்***

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2023***

*கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2023.11.13ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | ஹோமாகம | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் பொது அலுவலகம், கொழும்பு- 05. | ஹோமாகமையைச் சுற்றியுள்ள நகரங்கள் | *2023.12.01* |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்.**- *அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இடவசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2,300 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணபத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2023.11.13ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

டபிள்யூ. சுதத் எல்.சீ. பெரேரா,
*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கிருள வீதி, கொழும்பு 05,*
*2023.10.11.*

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2023**

விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம் - 2023

**கட்டிட உரிமையாளருக்காக :**

01. முழுப்பெயர் :-----------------------------------------------------------------------------------------------------.
02. முகவரி :---------------------------------------------------------------------------------------------------------.
03. தொலைபேசி இலக்கம் :-----------------------------------------------------------------------------------------.
04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :-------------------------------------------------------------------------.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :---------------------------------
-------------------------------------------------------------------------------------------------------------------.
02. மாதாந்த வாடகைத் தொகை :-----------------------------------------------.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :-------------------------------------------------------------------------.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :-----------------------------------------
05. இடத்தின் விஸ்தீரணம் :-------------------------------------------------------------------------------------------
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கையும் தொடர்பான விபரங்கள் :-----------------------
07. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ?:-------------------------------------------------------.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ?:-----------------------------------------------------.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி /வேலி) -------- :-----------------------------------------------.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ?:-------------------------------------------------------------.
11. தொலைபேசி தொடர்பு உள்ளதா ?:-----------------------------------------------------------.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

---------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

10-351

---

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்-ஏறாவூர்**

**பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட தோணி, சவள்கள், துவிச்சக்கர வண்டிகள், கோடரி, கத்தி, இலத்திரனியல் தராசு என்பன 2023.11.04 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்ற பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

நீதிவான்.

சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்,
ஏறாவூர்,
2023.10.12.

**அட்டவணை**

**Production List of Public Auction**

| *S. No.* | *Case No.* | *Category* | *No. of Item* |
|---|---|---|---|
| 01 | No Number | துவிச்சக்கர வண்டி கரியலுடன் (உடைந்தது) | 35 |
| 02 | No Number | துவிச்சக்கர வண்டி (உடைந்தது) | 50 |
| 03 | 27779/MISC/2018 | பைபர் தோணி (உடைந்தது) | 01 |
| 04 | 27503/PC/18 | இரும்பிலான உண்டியல் (உடைந்தது) | 01 |
| 05 | 25836/PC/17 | செப்பு கம்பி | 2 kg |
| 06 | 41555/MISC/2023 | இலத்திரனியல் தராசு | 01 |
| 07 | 41556/MISC/2023 | இலத்திரனியல் தராசு | 01 |
| 08 | 41557/MISC/2023 | இலத்திரனியல் தராசு | 01 |
| 09 | 41558/MISC/2023 | இலத்திரனியல் தராசு | 01 |
| 10 | 41559/MISC/2023 | இலத்திரனியல் தராசு | 01 |
| 11 | 41560/MISC/2023 | இலத்திரனியல் தராசு | 01 |
| 12 | 41561/MISC/2023 | இலத்திரனியல் தராசு( தலைப்பகுதி மட்டும்) | 01 |
| 13 | 41562/MISC/2023 | இலத்திரனியல் தராசு | 01 |
| 14 | 41563/MISC/2023 | மரத்திலான அடிமட்டம் (1 மீற்றர்) | 01 |
| 15 | 41125/PC/2023 | மண்வெட்டி | 01 |
| 16 | 41125/PC/2023 | சவள் | 01 |
| 17 | 41125/PC/2023 | இரும்பு பார் (4”) | 01 |
| 18 | 40355/F/2023 | கோடரி | 01 |
| 19 | 40357/F/2023 | கோடரி | 01 |
| 20 | 41749/F/2023 | கோடரி | 01 |

| S. No. | Case No. | Category | No. of Item |
|---|---|---|---|
| 21 | 407672/F/2023 | கோடரி | 01 |
| 22 | 42055/F/2023 | கோடரி | 01 |
| 23 | 40356/F/2023 | அறுவா கத்தி | 01 |
| 24 | 42054/F/2023 | அறுவா கத்தி | 01 |
| 25 | 41750/F/2023 | அறுவா கத்தி | 01 |
| 26 | 40622/MISC/2023 | சவள் | 01 |
| 27 | 40897/MISC/2023 | சவள் | 01 |
| 28 | 40755/MISC/2023 | சவள் | 01 |
| 29 | 41225/MISC/2023 | சவள் | 01 |
| 30 | 41226/MISC/2023 | சவள் | 01 |
| 31 | 41227/MISC/2023 | சவள் | 01 |
| 32 | 41228/MISC/2023 | சவள் | 01 |
| 33 | 41229/MISC/2023 | சவள் | 01 |
| 34 | 41448/MISC/2023 | சவள் | 01 |
| 35 | 41449/MISC/2023 | சவள் | 01 |
| 36 | 41450/MISC/2023 | சவள் | 01 |

10- 423

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**நிர்மாயா ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**முன்பு ஹெலிரொன் நெட்வர்க் (பிரைவட்) லிமிட்டட்**
**(கம்பனி பதிவு இலக்கம் பீவி 116106)**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பெயர் மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி ஹெலிரோன் நெட்வர்க் (பிரைவட்) லிமிட்டட் (முன்னைய பெயர்) என்ற அதன் பெயரை நிர்மாயா ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் (புதிய பெயர்) என 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி (கம்பனி பதிவு இலக்கம் பீவீ 116106) இன் கீழ் தன் பெயரை மாற்றம் செய்துள்ளது என்பதையும் இக் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் எம் & என் கட்டிடம் (5 ஆம் மாடி), இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3 என்ற முகவரியில் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகின்றோம்.

பிரணவன் நீலகண்டன்,
பணிப்பாளர்,
என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்ரட்டறீஸ்
( பிறைவேட்) லிமிடெட்,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் & என் கட்டிடம், (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு- 00300.

10- 353

**நியூ டீ ஜீ ஃவஷன் காமன்ட் (பிரைவேட்) லிமிட்டட்**

**கம்பனியின் பதிவு இல.- PV 3841**

**கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்பு அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்:* நியூ டீ ஜீ ஃவஷன் காமன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* அசோகாராம வீதி, கூந்தெனிய திக்வெல்ல
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* HC(CIVIL) 76./2019/ CO
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* Gerard Jeevananthan David
*முகவரி:* Level 3, No.11, Castle Lane, Colmbo 4
*கம்பனி விடுவிப்பு திகதி:* 2023.08.28

10- 408

---

**ரன் மலு ஃபாஷன் (பிரைவேட்) லிமிட்டட்**

**கம்பனியின் பதிவு இல.- PV 2258**

கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்பு அறிவித்தல்

*கம்பனியின் பெயர்:* ரன் மலு ஃபாஷன் (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.03, புல்லர்ஸ் லேன், கொழும்பு 07
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* HC(CIVIL) 50./2011/ CO
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* G. J. David
*முகவரி:* C/O SJMSAssociates, Level 4, No.2, (Presently at Level 3, No.11), Castle Lane, Colmbo 4
*கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்பு திகதி:* 2023.10.06

10- 409

---

**பகிரங்க அறிவித்தல்**

**ஒருங்கிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்**

*சிங்கர் (ஸ்ரீ லங்கா ) பி.எல்.சி. (கம்பனி இல. PQ 160) மற்றும் சிங்கர் பிஸ்னஸ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PV 105194) மற்றும் டொமஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PV 128617)*

சிங்கர் (ஸ்ரீ லங்கா) பி.எல்.சி. (கம்பனி இல. PQ 160), சிங்கர் பிஸ்னஸ் ஸ்கூல் ( பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PV 105194) டொமஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி பதிவு இல. PV 128617) ஆகியன 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ("சட்டம்") 242 ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட இருக்கின்றன என்பது மேற்படி சட்டத்தின் 244 (3) ஆம் பிரிவுக்கு அமைவாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. என்பதாக இருக்கும். கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் ஒருங்கிணைப்புச் சான்றிதழ் வழங்கப்பட்ட திகதியிலிருந்து இந்த ஒருங்கிணைப்பு நடைமுறைக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாகிய சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி.யின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், இல. 112, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05 என்னும் முகவரியில் அமைந்திருக்கும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களின் எந்தவொரு பங்குதாரரும் அல்லது கடன் வழங்குநரும் அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களின் ஒன்று கட்டுப்பாடு கொண்டுள்ள எவரேனுமொருவரும் ஒருங்கிணைப்பு பிரேரணையின் பிரதிகளை வழமையான வியாபார நேரங்களில் இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்ற முகவரியில் பார்வையிடலாம்.

சபைகளின் கட்டளைப்படி,

சிங்கர் (ஸ்ரீ லங்கா) பி.எல்.சி.,
சிங்கர் பிஸ்னஸ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டட்,
டொமஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்.

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்.

400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2023,ஒற்றோபர் 20.

10- 440

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

எக்கோ வென்ட்டிலேட்டா(ர்) ஸ்
கணக்கு இல.: 0206 1000 0127

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.08.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.09.27 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.10.10 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே நான்கு இலட்சத்து எண்பத்தி நான்காயிரத்து நாநூற்று எழுபத்தி ஏழு ரூபா நாற்பத்தி எட்டு சதம் (ரூபா 20,484,477.48) 2023, யூலை 24 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நாற்பத்தி நான்கு இலட்சத்து பதினெட்டாயிரத்து எண்ணூற்று எழுபத்தி ஏழு ரூபா எழுபத்தி எட்டு சதம் (ரூபா 4,418,877.78) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஆறு தசம் ஒன்பது மூன்று வீதம் (6.93%) மேலும் ஒரு கோடியே முப்பத்தி ஐந்து இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து எழுநூற்று எழுபது ரூபா முப்பத்தி இரண்டு சதம் (ரூபா 13,587,770.32) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டுமுறி இலக்கங்கள் 2949, 3882 மற்றும் 5383 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.11.15 ஆந் திகதி மு.ப. 9.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை நான்கு கிரவேட்ஸ் மற்றும் மாநகர சபை எல்லைகளுக்குள் மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவின் துடாவ வடக்கு இல. 420B கிராம அலுவலர் பிரிவின் துடாவ இல் அமைந்த ஹக்மீமன வீதி, வரிமதிப்பீட்டு இல. 323 ஐ ஏற்ற "உஸ்வத்தை இன் லொட் A1 இன் லொட் இலக்கங்கள் A1a, A1b ஒன்றிணைக்கப்பட்டதன் உப பிரிவாகும்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். பீ. நந்தசிறி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016.08.02 ஆந் திகதியிடப்பட்ட இல. 122/ 2016 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A1a என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: பட்டபெந்திகே வத்த மற்றும் புன்ச்சி உஸ்வத்த மற்றும் இதே காணியின் லொட் A1b; கிழக்கு: இதே காணியின் லொட் A1b மற்றும் லொட் A2; தெற்கு: உஸ்வத்த மற்றும் மேற்கு: மனோலகேவத்த, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி மூன்று தசம் மூன்று ஒன்று பேர்ச் (00ஏ. 00றூ. 33.31பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 122/ 2016 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தறை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 866/109 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 445

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

நிமோவி சிவில் இன்ஜினியர்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்
கணக்கு இல.: 0112 1000 1257

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.05.25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.07.07 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.06.29 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு கோடியே எட்டு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஐந்து ரூபா மூன்று சதம் (ரூபா 40,851,925.03) 2023, ஏப்பிறல் 26 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத்

தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே எழுபது இலட்சம் ரூபா (ரூபா 17,000,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் ஒரு கோடியே இருபத்து ஒரு இலட்சத்து முப்பதினாயிரம் ரூபா (ரூபா 12,130,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதம் (16%) மேலும் எழுபத்து இரண்டு இலட்சத்து பத்தாயிரத்து இருபத்து எட்டு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூபா 7,210,028.54) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஆறு தசம் ஒன்பது மூன்று வீதம் (6.93%) வருமதியாகவுள்ள வட்டியும், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்படட இலக்கங்கள் 36 மற்றும் 738 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.11.21 ஆந் திகதி இல. 2162 எனும் வரைபடத்தின் லொட் B2 பி.ப. 4.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லே பத்துவின் கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் பிட்ட கோட்டே இல. 519/1 எனும் கிராம அலுவலர் பிரிவின் கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகர சபை எல்லைகளுக்குள் பிட்ட கோட்டையில் அமைந்த ஆனந்த பாலிக்கா மாவத்தை 5 ஆவது ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 60/30 மற்றும் தற்போது இல. 58/44 T ஐ ஏற்ற "ஜயசிங்ஹ கார்டன்ஸ்" (முன்னர் எகொடபொத்துவில கும்புர என அழைக்கப்பட்ட) என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எல். என். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, ஏப்பிறல் 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 1131 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: இங்கமைந்த லொட் A; கிழக்கு: லொட் C (9.0 மீற்றர்கள் அகல வீதி); தெற்கு: லொட் C (9.0 மீற்றர்கள் அகல வீதி; மேற்கு: ஆனந்த பாலிக்கா மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 60/29 மற்றும் இல. 415/98 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் B, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒன்பது பேர்ச் (00ஏ. 00றூ. 09பே.) அல்லது ஹெக். 0.0228 விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1131 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்த - நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 404/67 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எல். என். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015.07.07 ஆந் திகதியிடப்பட்ட இல. 8870 எனும் அண்மைய நில அளவீட்டிற்கமைவாக கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லே பத்துவின் கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகர சபை எல்லைகளுக்குள் பிட்ட கோட்டையில் அமைந்த 5 ஆவது ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 60/30 ஐ ஏற்ற உத்தரவுபெற்ற நில அளவையாளர் மற்றும் லெவலர் எம். எல். என். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, ஏப்பிறல் 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 967 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B இன் மீள் அளவீடான லொட் B1 என குறிப்பிடப்பட்ட "எகொட பொத்துவில கும்புர" என்றழைக்கப்படும் கட்டிடங்களுடனான காணியின் எல்லைகளாவன: வடக்கு: இல. 415/98 எனும் வரைபடத்தின் லொட் B, 5 ஆவது ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 60/29F மற்றும் இல. 967 எனும் வரைபடத்தின் லொட் A; கிழக்கு: இல. 967 எனும் வரைபடத்தின் லொட் A மற்றும் லொட் C (9.0 மீற்றர்கள் அகல வீதி); தெற்கு: இல. 967 எனும் வரைபடத்தின் லொட் C (9.0 மீற்றர்கள் அகல வீதி); மேற்கு: இல. 967 எனும் வரைபடத்தின் லொட் C (9.0 மீற்றர்கள் அகல வீதி), இல. 415/98 எனும் வரைபடத்தின் லொட் B, 5 ஆவது ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 60/29F, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒன்பது பேர்ச் (00ஏ. 00றூ. 09பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன்.

கீழே காட்டப்பட்டதன் ஊடாகவும் மற்றும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமையும் அதனுடன் இணைந்த ஏனைய உரிமைகளுடனானது:

கூறப்பட்ட கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர செயலாளர் பிரிவினுள் பிட்ட கோட்டே இல. 519/1 எனும் கிராம அலுவலர் பிரிவின் பிட்ட கோட்டை ஆனந்த பாலிக்கா மாவத்தை ஜயசிங்ஹ கார்டன்ஸில் அமைந்த "ஜயசிங்ஹ கார்டன்ஸ்" (எகொட பொத்துவில கும்புர) என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எல். என். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, ஏப்பிறல் 08 ஆந் திகதியிடப்படட இல. 967 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் C (30 அடிகள் அகல வீதி) என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: லொட் B மற்றும் கான் (ஆறு); கிழக்கு: இல. 834 எனும் வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 7, 8 மற்றும் 9 மற்றும் லொட் D; தெற்கு: இல. 966 எனும் வரைபடத்தின் லொட் 2 மற்றும் மேற்கு: வீதி, இல. 834 எனும் வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 4, 5 மற்றும் லொட் இலக்கங்கள் B மற்றும் A, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்து நான்கு தசம் நான்கு சைபர் பேர்ச் (00ஏ. 00றூ. 24.40பே.) அல்லது ஹெக். 0.0617 விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 967 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்த - நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A/323/61 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லே பத்துவின் கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர பிரதேச

செயலாளர் பிரிவின் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குள் நாவல கிழக்கு இல. 520B எனும் கிராம அலுவலர் பிரிவின் ஸ்ரீ ஞானேந்ர மாவத்தை நாவலயில் அமைந்த 1 ஆவது ஒழுங்கை பழைய வீதி வரிமதிப்பீட்டு இல. 1 ஐ ஏற்ற "லியனகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டி. எஸ். குணதிலக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1994, சனவரி 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 2162 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B2 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: ஸ்ரீ ஞானேந்ர வரிமதிப்பீட்டு இல. 193 ஐ ஏற்ற வளவு; கிழக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். டப்ளியு. சீ. பீ. விஜேசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 430 எனும் வரைபடத்தின் லொட் A என காட்டப்பட்ட வளவு; தெற்கு: 1 ஆவது ஒழுங்கை, பழைய வீதி; மற்றும் மேற்கு: லொட் B, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினொன்று தசம் ஏழு ஏழு பேர்ச் (00ஏ. 00றூ. 11.77பே.) அல்லது 0.0298 ஹெக்டயார்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2162 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்த - நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 335/45 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 446

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஜீ. டபிள்யூ எம் மனோஹர
கணக்கு இல.: 0056 5000 7338

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.08.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.09.27 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.09.27 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஆறு கோடியே முப்பத்தி நான்கு இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து ஆறு ரூபா ஐம்பத்தி இரண்டு சதம் (ரூபா 63,466,006.52) 2023, யூலை 31 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை மூன்று கோடியே பதினாறு இலட்சத்து ஐம்பத்தி மூவாயிரம் ரூபா (ரூபா 31,653,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் நாற்பத்தி மூன்று இலட்சத்து இருபத்தி ஐயாயிரத்து எண்ணூற்று முப்பத்தி ஏழு ரூபா எண்பது சதம் (ரூபா 4,325,837.80) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்து வீதம் (10%) மேலும் இருபத்தி ஏழு இலட்சத்து தொண்ணூற்றி மூவாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஒன்பது ரூபா நாற்பத்தி இரண்டு சதம் (ரூபா 2,793,989.42) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) மேலும் ஒரு கோடியே ஐம்பத்தி நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா அறுபத்தி ஒரு சதம் (ரூபா 15,450,000.61) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஆறு தசம் ஒன்பது மூன்று வீதம் (6.93%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2056, 2156 மற்றும் 2370 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான என். யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2023.11.18 ஆந் திகதி மு.ப. 10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி கங்கவட்ட கோரளே பிரதேச செயலாளர் பிரிவின் கண்டி மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் வட்டாரம்தென்ன கிராம அலுவலர் பிரிவின் மாபனவத்துர இல் அமைந்த ஸ்ரீ சுமங்கள மாவத்தை வாரியபொல வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 132/ 17 தற்போது 132/ 12 மற்றும் 132/ 12A ஐ ஏற்ற "வெலிகந்த எனும் புக்ரா எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு (உத்தரவுபெற்ற நில அளவையாளர் RCO டி லா மொட்டே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1965, நவெம்பர் 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 2966A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 10 ஒன்றிணைப்பு மற்றும் மீள் அளவீடான (உத்தரவுபெற்ற நில அளவையாளர் C பாளனகும்புர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, செத்தெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 3408 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட காணித்துண்டு மற்றும் (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரீ. பீ. அத்தனாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, ஒகத்து 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 180/ 2011 எனும் வரைபடத்தில் லொட் 1 என காட்டப்பட்ட) உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஏ. திஸாநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017, யூலை 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 1445 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட முக்கோண வடிவிலான காணியின் எல்லைகளாவன - கிழக்கு: திரு. சமரநாயக்க என்பவருக்கு சொந்தமான காணி; தென் மேற்கு: உத்தரவுபெற்ற

நில அளவையாளர் RCO டி லா மொட்டே என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 2966A எனும் வரைபடத்தின் லொட் 9 மற்றும் பிரதான வீதி வரை செல்லும் 20 அடிகள் அகல வீதி; வட மேற்கு: இல. 2966 எனும் வரைபடத்தின் லொட் 8 மற்றும் லொட் 11 ஐ பிரிக்கும் வயர் (wire) வேலி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி ஐந்து தசம் மூன்று ஏழு பேர்ச் (00ஏ. 00றூ. 35.37பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1445 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 623/129 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் RCO டி லா மொட்டே என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 2966A எனும் வரைபடத்தின் லொட் 16 காட்டப்பட்ட 20 அடிகள் அகல வீதியினூடாக மற்றும் அதன் மீதும் அதன் கீழும் நடை பயணமாகவும் அல்லது வாகனத்திலோ பாரம் ஏற்றப்பட்ட அல்லது பாரமேற்றப்படாத வாகன போக்குவரத்து ஆகிய இரண்டிற்குமான பிரயாணிப்பதற்கும் மற்றும் மார்க்க உரிமையும் மின் அல்லது ரெலிகொம் கேபில்களை பதிக்கவும் மற்றும் வயர்களை மேலாக செலுத்தவும் தண்ணீர் மற்றும் வடிகால் சேவைகள் மற்றும் ஏனைய வசதிகளுக்குமான உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 447

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

சுதேஷ் எண்ட்டபிரைசார்ஸ் அன்ட் எக்ஸ்போட்டார்ஸ்
கணக்கு இல.: 0008 1001 3508

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.06.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.03.03 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.03.01 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), பத்திரிகைகளிலும் 2023.02.24 ஆந் திகதிய "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகையிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐந்து கோடியே அறுபத்தி ஐந்து இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து எண்ணூற்று எண்பத்தி எட்டு ரூபா ஐம்பது சதம் (ரூபா 5,65,43, 888.50) 2022, மே 30 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐந்து கோடியே இருபத்தி ஆறு இலட்சம் ரூபா (ரூபா 5,26,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) மேலும் பதினொரு இலட்சத்து இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 11,02,500.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு ஈட்டு முறி இலக்கங்கள் 5330,6422 மற்றும் 4656 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.12.08 ஆந் திகதி பி. ப. 12.15 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரலே அதிக்காரி பத்துவின் பியகமை பிரதேச சபை (மாகொல உப அலுவலகம்) எல்லைகளுக்குள் மற்றும் பியகம பிரதேச செயலாளர் பிரிவின் இல. 256B, பத்தலஹேன்வத்த கிராம அலுவலர் பிரிவின் கல்ஏதன்ட கிராமத்தில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 150 ஐ ஏற்ற "மீகாஹாவத்த பாஹால கொட்டச" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். விமலரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, மே 16 ஆந் திகதியிடப்பட்ட (2015, ஏப்பிறல் 10 ஆந் திகதியிடப்பட்ட மீள் அறவீட்டு ஒப்புதலிற்கு அமைவாக) இல. 132/ 1999 எனும் வரைபடத்தில் அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடகிழக்கிற்கு: வயல் வெளி; தென் கிழக்கிற்கு: டபிள்யூ. டீ. ஃபிரான்சிஸ் இற்குச் சொந்தமான காணி; தென் மேற்கிற்கு: கோஹோல்வில - கனவல வீதி; மற்றும் வடமேற்கிற்கு: வீதி மற்றும் லோரா சேரம் இற்குச் சொந்தமான காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம்: ஒரு றூட் பத்து பேர்ச் ( 0ஏ.1றூ.10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 132/1999 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் N 379/ 98 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டாவது அட்டவணை**

16 Feet Storage Tank
18 Feet Storage Tank
Filter

Equipment falling Film Evaporator - Oil Dryer - 2018-01
Equipment surface Condenser - COND 2018-03
Thermo Compressor -VO-18-11951
Equipment Centrifuge Alfa Laval
Drier
Cooling System
Control Panal

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 448

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

சுதேஷ் எண்ட்டபிரைசார்ஸ் அன்ட் எக்ஸ்போட்டார்ஸ்
கணக்கு இல.: 0008 1001 3508

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2023.06.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2023.03.03 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2023.02.24 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலானஒரு கோடியே நாற்பத்தி இரண்டு இலட்சத்து முந்நூற்று பதின்மூன்று ரூபா எண்பத்தி ஏழு சதம் (ரூபா 14,200,313.87) 2022, மே 30 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இருபத்தி இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூபா 2,250,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைத்து வீதம் (15%) மேலும் ஒரு கோடியே பதினொரு இலட்சத்து ஐம்பதினாயிரத்து இருநூற்று பதின்மூன்று ரூபா (ரூபா 11,150,213) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரெண்டு வீதம் (12%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு ஈட்டு முறி இல. 5685 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.12.08 ஆந் திகதி பி.ப. 1.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே, ராகம் பத்துவின், பேலியகொடை நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் களனி பிரதேச செயலாளர் பிரிவின் இல. 174, பேலியகொட கிராம அலுவலர் பிரிவின் பேலியகொடை பராக்கிரம மாவத்தையில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 100 ஐ ஏற்ற "அஸ்மெடியவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஏ. குணவர்தன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, யூலை 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 2052 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் X என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: பராக்கிரம மாவத்தை, இல. 96, சிலோன் பென்சில் கோப்பரேஷன் லிமிட்டெட் வளவுகள்; கிழக்கு: பராக்கிரம மாவத்தை, இல. 96, சிலோன் பென்சில் கோப்பரேஷன் லிமிட்டெட் வளவுகள் ; தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச்.ஏ. பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3134 எனும் கூறப்பட்ட வரைபடத்தின் லொட் A 2A பராக்கிரம மாவத்தை, 6 அடி அகல பாதை, பராக்கிரம மாவத்தை, இல. 102/5 ஐ ஏற்ற வளவு; மற்றும் மேற்கு: 6 அடி அகல பாதை, உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச்.ஏ. பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3134 எனும் கூறப்பட்ட வரைபடத்தின் லொட் A 2A மற்றும் பீ.ஜே. எஸ். ராஜபக்ஷ விற்கு சொந்தமான காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி இரண்டு பேர்ச் (0ஏ.0றூ.32பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2052 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 168/116 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே ஒன்றிணைக்கப்பட்ட காணியின் உபபிரிவான மேற் கூறப்பட்ட லொட் ஓ கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது.

1.கூறப்பட்டபேலியகொடையில்அமைந்த"அஸ்மெடியவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம்.டீ.ஜே.வீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, ஏப்பிறல் 07 ஆந் திகதியிடப்பட்ட இல. 7671 எனும் வரைபடத்தில் அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: பராக்கிரம மாவத்தை இல. 96, சிலோன் பென்சில் கோப்பரேஷன் லிமிட்டெட் வளவுகள்; கிழக்கு: பராக்கிரம மாவத்தை இல. 96, சிலோன் பென்சில் கோப்பரேஷன் லிமிட்டெட் வளவுகள்; தெற்கு: பராக்கிரம மாவத்தை, வீதி மற்றும் இல. 102/5 ஐ ஏற்ற வளவு, வளவு பராக்கிரம மாவத்தை; மற்றும் மேற்கு: வீதி மற்றும் லெஸ்லி ஆர் பொன்சேக்கா மற்றும் ஏனையோரின் காணி , ஆகிய இவ் எல்லைகளுக்குள்

அமைந்த காணியின் விஸ்தீரணம்: இருபத்தி எட்டு தசம் ஐந்து சைபர் பேர்ச்(0ஏ.0றூ.28.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 7671 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 168/11 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2.கூறப்பட்டபேலியகொடையில்அமைந்த"அஸ்மெடியவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். ஏ. பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1982, செத்தெம்பர் 15ஆந் திகதியிடப்பட்ட இல. 3134 எனும் வரைபடத்தில் அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் $A^1$ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: சிலோன் பென்சில் லிமிட்டெட்டின் சொத்து; கிழக்கு: வின்சென்ட் ராஜபக்ஷவின் சொத்து ; தெற்கு: லொட் A2 மற்றும் மேற்கு: பீ ஜே எஸ் ராஜபக்ஷவின் சொத்து, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் நான்கு தசம் நான்கு நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 4.44பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3134 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 168/13 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 449

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஏல விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல.: 83388855
மேலதிகபற்று வசதி இல. 72109041

சாந்த செவன, அளுத்வல என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி தொன் சீமான் பட்டபெந்தி சிறியானி மற்றும் தொடந்துவ வடுகே அஜித் ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.09.22ஆந் திகதிய 2351ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.09.21 ஆந் திகதி "தினகரன்" , "தினமின" மற்றும் "டெய்லிநியுஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனங்களை இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச்.டி.துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.11.30ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

